<u>செய்தி வெளியீடு எண்.731</u> <u>நாள்.19.10.2009</u>

# செய்தி வெளியீடு

## இலவச எரிவாயு இணைப்புகளை எண்ணெய் நிறுவனங்கள் விரைவாக வழங்க கோரிக்கை. எரிவாயு நுகர்வோர்களின் குறைகளை தீர்ப்பதற்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நுகர்வோர் குறைதீர் கூட்டங்கள் நடத்தப்படும்

## மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு

**இன்று (19.10.2009) காலை 10.30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இந்தியன் ஆயில் கழகம், பாரத் பெட்ரோலியக் கழகம், இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம் ஆகிய எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களுடன் இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார்கள்.**

**2008–2009ஆம் ஆண்டிற்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்க 6 இலட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. எண்ணெய் நிறுவனங்கள் இலவச எரிவாயு இணைப்பு கொடுக்க காலதாமதம் உள்ளதை உணவு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்தியன் ஆயில் கழகம், பாரத் பெட்ரோலியக் கழகம், இந்துஸ்தான் பெட்ரோலியக் கழக உயர் அலுவலர்கள் 15.11.2009க்குள் நிலுவையிலுள்ள அனைத்து இணைப்புகளும் வழங்கப்படும் என உறுதியளித்தார்கள். மேலும், தற்போது நடைமுறையிலுள்ள நுகர்வோர்கள் எரிவாயு முகவர்களிடம் சிலிண்டர் கோரி நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் அவர்கள், இனிமேல் எரிவாயு சிலிண்டர்களை உடனடியாக நுகர்வோர்களுக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்கள். எண்ணெய் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் சிலிண்டர்கள் காலதாமதமின்றி நுகர்வோர்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்கள். எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்க காலவரையறை நிர்ணயிக்கப் படவில்லை. எரிவாயு சிலிண்டர் கோரி பதிவு செய்தால் பதிவின் அடிப்படையில் சிலிண்டர்கள் வழங்கப்படும் என்று எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுவதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் இந்தியன் ஆயில் கழக நுகர்வோர்களுக்கு** (IOC) 155233 **என்ற தொலைபேசியிலும், பாரத் பெட்ரோலியக் கழக நுகர்வோர்களுக்கு (BPC)** 26215575 **என்ற தொலைபேசியிலும், இந்துஸ்தான் பெட்ரோலியக் கழக**

**நுகர்வோர்களுக்கு** (HPC) 28415153 **என்ற தொலைபேசியிலும், புகார் செய்தால் உடனடியாக தீர்வு செய்யப்படும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தார்கள். மேலும், புதிய திட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் எரிவாயு நுகர்வோர்களின் குறைகளை தீர்வு செய்ய எரிவாயு முகவர்களின் கூட்டம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும். இந்த கூட்டத்தின் போது எரிவாயு நுகர்வோர்கள் அவர்களுடைய குறைகளைத் தெரிவித்தால் உடனுக்குடன் தீர்வு செய்யப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த தேதியில் கூட்டம் நடத்தப்படும் என்ற விவரம் அந்தந்த மாவட்ட நிர்வாகம் செய்தித் தாள்களில் பிரசுரம் செய்யப்படும். இந்த குறைதீர் கூட்டத்தில் எண்ணெய் நிறுவனங்களின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்து கொள்வார். இவ்வாறு ஒவ்வொரு மாதமும் எண்ணெய் முகவர்கள் கூட்டம் நடத்துவதற்கு இந்தியன் ஆயில் கழகம், பாரத் பெட்ரோலியக் கழகம், இந்துஸ்தான் பெட்ரோலியக் கழக உயர் அலுவலர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**